இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 251 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 08 – திங்கள்கிழமை 21 ஏப்ரல் 2025 – சென்னை 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 251: Thiruvalluvar Year - 2056 - Chithirai 08 - Monday 21 April 2025 - Chennai 12+8 Pages ₹ 5.00


### மதவாதம் – வெறுப்பு உணர்ச்சியோடும் பிரித்தாளும் சூழ்ச்சி எண்ணத்துடனும் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வர முயற்சிக்கும்

# தொகுதி மறுசீரமைப்பு - மும்மொழித் திட்டத்தை எதிர்க்கிறோம்!

## “டைம்ஸ் ஆப் இந்தியா” ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, ஏப். 21 -**

**“மதவாதம் - வெறுப்பு உணர்ச்சியோடும், பிரித்தாளும் சூழ்ச்சி எண்ணத்துடனும் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வர முயற்சிக்கும் தொகுதி மறுசீரமைப்பு - மும்மொழித் திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சண்டே - டைம்ஸ் (20.4.2025) (‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஞாயிறு பதிப்பு) ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் விளக்கத்துடன் கூறியுள்ளார்.**

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “டைம்ஸ் ஆப் இந்தியா” (20.4.2025) ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம் வருமாறு:-*

**செய்தியாளர்:** தொகுதி மறுசீரமைப்பை நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** சிறு திருத்தம். தொகுதி மறுசீரமைப்பைத் தி.மு.க. எதிர்க்கவில்லை. எதிர்வரவுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பைத்தான் உறுதியாக எதிர்க்கிறோம்.

மக்கள்தொகைக் கட்டுப்பாடு என்பது நாட்டின் பொருளாதாரம், மக்களின் நல்வாழ்வு, வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 50 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. நாட்டு நலனில் அக்கறை உள்ள மாநிலமாகத் தமிழ்நாடும் தென்மாநிலங்களும் இருந்த காரணத்தால் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தினோம்.

மக்கள்தொகைப் பெருக்கம் என்ற நெருக்கடியை, மனிதவள ஆற்றல் என்ற சாதகமான அம்சமாக மாற்றியதில் தமிழ்நாட்டின் பங்கு முக்கியமானது. நாட்டின் நலனுக்காக ஒன்றிய அரசு முன்வைத்த ஒரு திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றிய தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்குத் தண்டனையாக, அதே மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைப்பது என்ன நியாயம்? இந்த அளவுகோலைத்தான் எதிர்க்கிறாம்.



**எங்களின் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்!**

**செய்தியாளர்:** தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை நிறுத்தி வைக்க தேவையான உங்கள் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் உள்ளனரா?

**முதல்வர்** : இரண்டே இரண்டு எம்.பி.க்களைக் கொண்டிருந்த தி.மு.க. தான், இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக நீடிக்கும் என்ற உறுதி மொழியை இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களிடமிருந்து பெற்றது.

மாநிலங்களவையில் ஒற்றை எம்.பி. யாக இருந்த எங்கள் இயக்கத்தின் நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளுக்காகவும், அந்தந்த மாநிலங்களின் உரிமைக்காகவும் முழங்கினார். பண்பட்ட ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றக்கூடிய அரசாங்கமும் அன்றைக்கு இருந்தது. தற்போது நியாயத்தைப் பெறுவதற்கு தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

அந்த வகையில், மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களும் நாடாளுமன்றத்தில் ஒருங்கிணைந்து நிற்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

நேரடியாகப் பாதிக்கப்படாத மாநிலங்களைச் சேர்ந்த கட்சிகளின் எம்.பி.க்களும் கூட, மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது என்பது மாநில உரிமைகளுக்கு மாநிலங்களின் அரசியல் பிரநிதித்துவ உரிமைக்கு விடுக்கப்பபடும் சவால் என்பதை உணர்ந்து, இந்த முயற்சிக்கு ஆதரவளிப்பார்கள் என நம்புகிறேன்.

**வளர்ச்சிக்கு துணை நிற்கும் மாநிலங்களை வஞ்சிப்பதா?**

**செய்தியாளர்:** தொகுதி மறுசீரமைப்பு என்பது ஒரு சட்டரீதியானது, அதை சட்டப்படி எப்படி நீங்கள் நிறுத்தி வைக்கமுடியும்?

**முதல்வர்:** நாங்கள் அதைத் தடுக்கவில்லை. நியாயமான காரணங்களை முன்வைத்து, அதனைத் தள்ளி வைக்கக் கோருகிறோம். ஏற்கெனவே இரண்டு சட்டத்திருத்தங்களுடன் தள்ளிவைக்கப்பட்டதை, மீண்டும் ஒருமுறை அதே வழியில் தள்ளிவைத்து, காலவரையறையைச் சரியாக செயல்படுத்தி, சமநியாயம் கொண்ட தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி, நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை வஞ்சிக்கக்கூடாது என்றுதான் சொல்கிறோம்.

**முதல் கட்ட வெற்றி: போராட்டம் தொடரும்!**

**செய்தியாளர்:** தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை தொடர்பாக எதிர்த்து போராட பாதிக்கப்பட்ட மாநிலங்களை முன்னின்று ஒருங்கிணைத்துள்ளீர்கள்? அதில் நீங்கள் திருப்தி அடைந்துள்ளீர்களா?

**முதல்வர்:** கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டம் மார்ச் 22 அன்று சென்னையில் கூட்டப்பட்டு 3 முதலமைச்சர்கள், 2 துணை முதலமைச்சர்கள், முன்னாள் முதலமைச்சர் உள்பட 8 மாநிலங்களின் பங்கேற்புடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது முதல் கட்ட வெற்றி. போராட்டம் தொடரும்.

**செய்தியாளர்:** பிரதமர் மோடியை தமிழக எம்.பி.க்கள் எப்போது சந்திப்பார்கள்? பிரதமரிடமிருந்து நல்லதொரு முடிவை நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

**முதல்வர்:** பிரதமர் அவர்களிடம் நேரம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறாம். அவரும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர். மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை உணர்ந்தே இருப்பார். அதனால், அவரது அழைப்பை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

**திசை திருப்ப வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை!**

**செய்தியாளர்:** தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை திசை திருப்பவே நீங்கள் இந்த தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையை எழுப்பியுள்ளீர்கள் என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்களே? உங்களின் பதில் என்ன?

**முதல்வர்:** தி.மு.க.வின் மாநில உரிமைக் குரலுக்கு நியாயமான பதில் சொல்ல முடியாதவர்கள்தான் திசை திருப்புகிறார்கள்.

ஒன்றிய அரசு வெளியிடும் புள்ளிவிவரங்கள், அறிக்கைகளின்படியே தமிழ்நாடு பல்வேறு இலக்குகளில் முன்னேறியிருக்கிறது. திராவிட மாடல் அரசின் திட்டங்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் போய்ச் சேர்ந்திருக்கிறது. மக்களின் ஆதரவு தி.மு.க.வுக்கு வலுவாக உள்ளது. எனவே, திசை திருப்ப வேண்டிய சூழலோ அவசியமோ எங்களுக்கு கிடையாது.

1971 மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு என்பது ஏற்கெனவே இந்திய அளவில் விவாதிக்கப்பட்டதுதான். அது மேலும் 25 ஆண்டுகளுக்குத் தொடரவேண்டும் என்றுதான் வலியுறுத்துகிறோம்.

**பிரதமர் இதுவரை உறுதி அளிக்காதது ஏன்?**

**செய்தியாளர்:** தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மோடி அரசு தெரிவித்துள்ளது. தொகுதி மறுசீரமைப்புக் குழுதான் இது பற்றி இறுதி முடிவு எடுக்கும் என்றும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளதே, உங்கள் பதில் என்ன?

**முதல்வர்:** அதை பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்திலோ நாட்டு மக்களுக்கோ ஏன் இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களின் கூட்டுக்குழுவின் சார்பில் இது பற்றி தெளிவுபடுத்த வேண்டும் என பிரதமரிடம் கேட்டும் இதுவரை ஏன் பிரதமர் தெளிவுபடுத்தி மக்கள் தொகையை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு பாதிப்பு வராது என்ற உறுதிமொழியை ஏன் அளிக்கவில்லை?

பா.ஜ.க. அரசு சொல்வதும் செய்வதும் முற்றிலும் மாறுபாடாக உள்ளது என்பதற்கு எத்தனையோ முன்னுதாரணங்கள் உண்டு. வக்ஃப் வாரிய திருத்தச் சட்டம் தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் உறுப்பினர்கள், குறிப்பாக தி.மு.க.வின் சார்பில் பங்கேற்றிருந்த உறுப்பினர்கள், முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்வைத்த வாதங்கள், கோரிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு,


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


### எனக்கும் மக்களுக்கும் துணையாய் இருந்து பணியாற்றுகிறார் துணை முதலமைச்சர்!

**செய்தியாளர்:** உங்கள் புதல்வர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் குறித்து நீங்கள் எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்?

**முதல்வர்:** துணை முதலமைச்சர் எனக்கும் துணையாக இருந்து பணியாற்றுகிறார். தமிழ்நாட்டு மக்களுக்கும் துணையாக இருந்து திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார்.



---

### உச்சநீதிமன்றம் குறித்து அவதூறு கருத்து தெரிவித்த

# பா.ஜ.க. எம்.பி.க்கு இந்தியா முழுவதும் கடும்கண்டனம்!

**புதுடெல்லி, ஏப். 21 -**

**ஆளுநர் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை பா.ஜ.க. கடுமையாக விமர்சித்தது. தற்போது வக்ஃப் சட்டத்துக்கு தடை விதித்ததை தொடர்ந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மீதே பா.ஜ.க. கடும் கோபத்தை வெளிப்படுத்தி உள்ளது.**

உச்சநீதிமன்றம் சட்டங்களை கையாண்டால் நாடாளுமன்றத்தை மூடவேண்டியதுதான் என்று பா.ஜ.க. எம்.பி நிஷிகாந்த் துபே சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து செய்தி நிறுவனத்திடம் பேசிய அவர், நாட்டில் உள்நாட்டு போர் ஏற்பட உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா காரணம் என்று கடுமையான குற்றம்சாட்டினர்.

மத கலவரங்களுக்கு உச்சநீதிமன்றமே பொறுப்பு என்றும் அவர் கூறினார். மற்றொரு பா.ஜ.க. எம்.பி. தினேஷ் சர்மாவும் உச்சநீதிமன்றத்தை விமர்சித்தார். இதற்கு காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பெயரைக் குறிப்பிட்டு மிரட்டல் விட்டிருக்கும் பா.ஜ.க. எம்.பி. மீது உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் பெரிதாக வெடித்ததை தொடர்ந்து நள்ளிரவுக்கு பிறகு பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா சமூக ஊடக பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் பா.ஜ.க. எம்.பி. கருத்தை ஆதரிக்கவோ எதிர்க்கவோ இல்லை என்றும் அதனை நிராகரிப்பதாக தெரிவித்துள்ளார். தலைமை நீதிபதி மீதான பா.ஜ.க. எம்.பி.களின் குற்றச்சாட்டுக்கு நாடு முழுவதும் கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

**உச்சநீதிமன்ற தீர்ப்பை விமர்சித்த பா.ஜ.க. எம்.பி.க்கு தி.மு.க. கடும் கண்டனம்!**

உச்சநீதிமன்ற தீர்ப்பை விமர்சித்த பா.ஜ.க. எம்.பி. நிஷிகாந்த் துபேவுக்கு தி.மு.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. செய்தித்தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், நாட்டின் சட்டங்களை பாதுகாப்பதற்காகவே உச்சநீதிமன்றம் உள்ளதாக கூறினார். ஒன்றிய பா.ஜ.க. அரசு, எந்த சட்டத்தையும் மதிப்பதில்லை, அவர்கள் விரும்பியதை மட்டுமே செய்வதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

**நீதிபதி ஏ.கே.கங்குலி கண்டனம்!**

வக்ஃப் விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்த பா.ஜ.க. எம்.பிக்களுக்கு உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.கே.கங்குலி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.கே.கங்குலி, மதச்சார்பற்ற நாடாக திகழும் நமது நாட்டின் அரசியலமைப்பை பாதுகாக்கும் கடமை உச்சநீதிமன்றத்திற்கு உள்ளதாக கூறினார்.

வக்ஃப் சட்டத்திருத்தத்துக்கு எதிரான வழக்கில், உச்சநீதிமன்றம் சில கேள்விகளை எழுப்பியதையடுத்து முதலில் பின்வாங்கிய ஒன்றிய அரசு, தற்போது அந்தச் சட்டத்தின் சில பிரிவுகளை செயல்படுத்த மாட்டோம் என்று கூறியதை ஏ.கே. கங்குலி குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், உச்சநீதிமன்ற தீர்ப்பை விமர்சித்தது மிகவும் துரதிர்ஷ்டவச மானது என்றும் அவர் தெரிவித்தார்.